DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.No. 171/2019

Deposition of LW2 examined as PW 3 Dt. 21.05.2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | நடராஜன் | Caste | : | |
| Father's/Husband's Name | : | பெருமாள் | Calling | : | |
| Village | : | உச்சிதமங்கலம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 28/2024 |

(Accused present )

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து JCB ஆபரேட்டராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 2019 ம் ஆண்டு மாதம், தேதி நினைவில் இல்லை. ஒ ரு நாள் இரவு 09.30 மணியளவில் அ,சா.1 எனக்கு போன் செய்து தான் உறவினர் ஒருவர் மது அருந்திவிட்டு நடக்க முடியாமல் நிதானமில்லாமல் இருந்தவரை தன்னுடைய இருசக்கர வாகனத்தில் அழைத்துக் கொண்டு வரகடையில் உள்ள அவருடைய வீட்டில் விட்டு விட்டு திரும்பி வரகடை அங்காளம்மன்கோயில் அருகே வந்தபோது, ஆஜர் எதிரி அவரை வழிமறித்து, அவரிடமிருந்த இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு சென்று விட்டதாக என்னிடம் கூறினார். நான் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்தேன். அப்போது வந்து ஆஜர் எதிரி இரும்பு ராடை எடுத்து அ.சா.1 ன் தலையில் ஓங்கி அடித்தார். அதில் அ.சா.1 ன் தலையில் இருந்து ரத்தம் கொட்டியது. நான் துணியால் மண்டையில் ரத்தம் வந்த இடத்தில் அழுத்தி பிடித்து கொண்டு சற்று தள்ளி அவரை அழைத்து வந்து விட்டேன். பின்னர் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து விட்டு விசாரித்தபோது தேர்தலுக்கா வெடி வெடித்ததாகவும், அந்த வெடியினை அ.சா.1 தான் தன் மீது போட்டுவிட்டதாக நினைத்து எதிரி பிரச்சனை செய்ததாகவும், அங்கிருந்தவர்கள் கூறினார்கள். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அ.சா.1 ஐ கொண்டு சேர்த்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.